# மாமரியே எங்கள்

மாமரியே எங்கள்
மாமரியே எங்கள் மனமகிழ்வே
மனுக்குலம் போற்றிடும் தாய் மரியே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க மரியே -(2)

**1**
மாமரியாய் வையம் வந்தவளே
விண்மீனாய் வழி நின்றவளே
தென்றலாய் மலருக்கு இதமளித்தாய்
தேன் அருவியாய் வாழ்வுக்கு
வரம் அளிப்பாய்

( மாமரியே )

**2**
காப்பதிலே கருத்தானவளே
கருணையிலே மனம் களிப்பவளே
இரவும் பகலும் உடனிருந்தும் உன்
அன்பால் காத்திட வேண்டுமம்மா

( மாமரியே )